# கவிஞர் அருணா செல்வம் புதுக்கவிதைகளில் கண்

# Kann in Aruna Selvam's Poetry

*முனைவர் வ. கோபாலகிருஷ்ணன்*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்

**Dr. V. Gopalakrishnan**
*Assistant Professor, Deparment of Tamil*
*Sona College of Arts and Science, Salem*

**ஆய்வுச் சுருக்கம்**

*உலகில் நிகழும் அனைத்துவிதமான இன்ப துன்ப காட்சிகளை நுகர்வதில் முதன்மையிடத்தில் இருப்பது கண் எனும் உறுப்பாகும். இத்தகைய உறுப்பானது இன்பத்தையும் துன்பதையும் ஒரே மாதிரியாக எடுத்துக்கொள்வதில்லை. இன்பத்தைக் காணும்போது மகிழ்ச்சியை வெளிப்படுத்துவது போன்ற பாவனையும், துன்பத்தைக் காணும்போது வருத்தத்தை வெளிப்படுத்துவது போன்ற முக பாவனையும் காட்டுவதில் கண்களே முதலிடம் பெறுகிறது. இக்கண்களுக்கு அழவும், சிரிக்கவும் தெரிகிறது. அதனாலே நம் முகத்தோற்றத்திற்குக் கண்கள் மிக அழகான கருத்தாக நமக்குப் புலப்படுகிறது. இத்தகைய சிறப்பம்சம் கொண்டிருப்பதனால்தான் தமிழ் இலக்கிய உலகில் புலவர்களும், கவிஞர்களும் கண்ணைப் பற்றி பல விதங்களிலும், பல கோணங்களிலும் பாடியிருக்கின்றனர். "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பதை மெய்படுத்தும் விதத்தில் "கண்" செயல்படுகிறது. அத்தகைய உறுப்பான கண்ணைப் பற்றி கவிஞர் அருணா செல்வம் கவிதையில் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

***முக்கியச் சொற்கள்:***

*சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், கலைத் திறன், தன்னிறைவு. இலக்கியப்படைப்பு*

**Abstract**

*The eyes are the preliminary organ that could see all the good and bad happenings in the world. But this organ would not take all the happenings in the same manner. While seeing good things it appears happy mood, while seeing bad things it appears sad mood. Eyes know to smile and cry. That is why eyes are considered very important in our face. Tamil scholars and poets also have written about eyes in various ways and dimensions in their work. Eyes prove the proverb that 'face is an index of the mind'. This article will discuss the eyes, how it is described in 'Kaanalilsinthiyakanneer' (Tear which shaded in Mirage) of Aruna Selvam.*

***Keywords:***

*Eyes, Arun Selvam, Pomes, Kamathupalai, Pathukavithaigal*

**Citation**

Gopalakrishnan, V. "Kann in Aruna Selvam's Poetry." *Journal of Tamil Culture and Literature*, vol. 1, no. 3, 2022, pp. 25–31.

**கவிஞரும் படைப்பும்**

*கவிஞர் அருணா செல்வம் அவர்கள் புதுச்சேரியில் பிறந்து இப்பொழுது பிரான்சு நாட்டில் வாழ்ந்து வருகின்றனர். இவரது இயற்பெயர் முத்து கஸ்தூரிபாய் என்பதாகும். முதுகலைத் தமிழ் இலக்கியம் பயின்றவர். பெற்றோர் முத்துலட்சுமி தேவி, முத்து இராசகோபால் ஆவர். இவரது படைப்புகள் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் புத்துணர்ச்சி ஊட்டுபவையாக உள்ளன. பெண் பாவலர்கள் பெரும்பாலும் புதுக்கவிதைகளையும் மரபுக் கவிதைகளையும் எழுதிவருகின்ற சூழல் தற்காலத்தில் நிலவுகிறது. இதிலே தனித்து நின்று பெண்ணுக்கும் பெண் இனத்திற்குமான கவிதைகளைப் புனைகிறார் அருணா செல்வம் எனும் படைப்பாளி.*

*வாழ்க்கைச் சூழலில் கடல்கடந்து வாழ்ந்தாலும் அருணா செல்வம் அவர்கள் தாய்த் தமிழகத்தையும், தமிழ்மொழியையும் இலக்கியத்தையும் மறக்காமல் நினைவில் கொண்டு வாழ்ந்து வருவதை இவர்தம் கவிதைகள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. பாவேந்தர் பாரதிதான் புதுவையில் பிறந்து தமிழுக்குக் கவிதைகளால் வளம் சேர்ந்தவர். அந்தப் பாவேந்தர் மண்ணில், பிறந்த கவிஞர் வெளிநாட்டில் வாழ்ந்தாலும் அங்கிருந்தபடியே தமிழுக்கு அழுத்தமான பணிகளைச் செய்துவருகிறார். மேலும் தமிழ் மொழிக்கும் தமிழர்களுக்கும் ஆக்கமான, செழுமையான பாக்களைத் தந்துள்ளமை சாலசிறந்தவொன்றாகத் திகழ்கிறது.*

*இவருடைய கவிதைகளில் அருமையான சொல்லாட்சிகள் அணிவகுப்பும், தேர்ந்த சிறப்பான கற்பனை வளங்களும் நம்மையும் நம் தமிழ் மொழியையும் மகிழ்ச்சிப்படுத்துகின்றன. எதுகை, மோனை பயன்பாடு சிறப்பாக அமைந்துள்ளன. தமிழ், இயற்கை, பெண்ணுரிமை, காதல், தாய்ப்பாசம் போன்ற கருத்தாக்கங்களை இவருடைய படைப்பில் காணமுடிகிறது. மேலும் இவர் நான்கு நாவல்களையும், பல சிறுகதைத் தொகுப்புகளையும், ஏராளமான கவிதைப் படைப்புகளையும், கட்டுரைகளையும் எழுதியுள்ளார். தற்போது பிரான்சு நாட்டின் கம்பன் கழகத்தின் மகளிர் அணியில் பொறுப்பில் திறம்பட செயல்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.*

**படைப்புகளில் கண் குறித்த ஆளுமை**

*மனித வாழ்வில் கண்கள் தனியொருவனின் சொத்தாக விளங்குகிறது. இது இன்பம், துன்பம் சார்ந்த அழகியல்களை உடலியலால் சிலிர்க்கச் செய்கிறது. நல் நிமித்தக்காட்சி களைக் கண்டு இன்பம் கொள்வதற்கும், துன்பக் காட்சிகளைக்காண விரைந்து செல்வதற்கும் கருவியாகப் பயன்படுகிறது. காட்சிப்படுத்துகிறது, நினைவூட்டுகிறது என அனைத்துச் செயல்களிலும் உடலியல்பு கொண்டு இயங்குகிறது கண் எனும் உறுப்பு. இத்தகைய கண்ணைக் குறித்து, காமத்துப்பாலில் அறக்கருத்துக்களை தொகைவகைப்படுத்திக் கூறும் அறங்கூறும் ஆசானாகக் காட்சித் தரவில்லை.கலையுணர்வு மிக்க கலைஞனாகத் தோன்றுகிறார்। என்று கு.மோகனராசு கூறுகிறார். கண்கள் மனிதனின் உடல் சார்ந்த அழகியல் வெளிப்பாடு ஆகும். தனியொருவனின் அடையாளம், குடும்பம், சமூகம் என அனைத்துப் பகிர்வுகளையும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தி இயங்கச் செய்கிறது என்று படைப்புகளைப் படைக்கின்ற படைப்பாளிகள் தங்கள் கருத்தை வெளிப்படுத்தி நிற்கின்றனர். இதனால் ''கண்'' எனும் உறுப்பின் மகத்துவத்தை நம்மால் அறிந்துகொள்ள முடிகிறது.*

*மாறாகசமூகம், குடும்பங்களில் கண்களுக்குக் கொடுத்துள்ள மதிப்புகள், அவை செயல்பட்ட நிலையும் மதிக்கத்தக்கதாக இருந்துள்ளன. கற்புக் காலத்தில் தலைவிபடும் உடல் சார்ந்த துன்பங்களில் கண்களைப் பழிப்பதும், அவ்வாறு துன்பம் விளைவித்த கண்களுக்கு காமநோய், பசலை, கண்ணீர் வற்றிவாடுதல் என்று மன உணர்வினால் கண்ணைப் பழிப்பது மாறுபட்ட நிலையாகத் தோன்றினாலும் பின்பு அக்கண்ணிற்காக இரக்கம் கொள்ளுதல் நிலையில் அக்கால படைப்புகளில் கவிதையாக்கம் பெற்று கவிதைக்குரிய அழகியல் பண்புடன் நிலைத்து நிற்பதையும் பழங்கால தமிழ் இலக்கியங்களின் வாயிலாகத் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.*

**கவிஞரின் கவிதைகளில் கண்**

*கவிஞர் அருணா செல்வம் பல்வேறு கவிதைகளைப் படைத்துள்ளார். அன்பும் அறமும், காக்கா, மூங்கில் காற்று, குமிழ்கள், கானலில் சிந்திய கண்ணீர் போன்ற பல்வேறு படைப்புகளைப் படைத்துள்ளார். இதுமட்டுமின்றி முற்றுபெறா கண்ணீர், நுட்பவணி, உடுக்கைப் பந்தம் முதலான கவிதைகளைப் படைத்து படைப்புலகில் சிறந்த கவிஞராக வலம் வருகின்றனார். பழங்கால இலக்கியங்கள் முதல் தற்கால இலக்கியங்கள் வரை கண்களைக் குறித்து உயர்வாகவே பேசி புகழ்ந்துள்ளனர். ஆனால், அத்தகைய கண்களிலும் வருத்த உணர்ச்சி நிரம்பியிருப்பதைக் கவிஞரின் கவிதையின் எழுத்துகளின் மூலம் உணரலாம். இதனை,*

***தாமரை முகத்தாள்***
***தாம் அரைக்கண்ணால்***
***நோக்கியதும் என் நெஞ்சைத்***
***தாக்கியதே!***
***குருடான கண்கள்[2]***

*என்ற கவிதையின் வாயிலாக கண்ணுக்குள் இருக்கும் பார்வையற்ற நிலையினை உணர்ந்துகொள்ள முடிகிறது. மேலும், சங்க இலக்கியங்கள் முதல் முகநூல் கவிதைகள் வரை வர்ணித்துப் பேசப்பட்டாலும் அழகான கண் என்று வர்ணித்தாலும் அதைப் பார்த்த மற்றொரு கண்களும் குருடாகிப் போவதைப்பற்றி பின்வரும் கவிதை எடுத்தியம்புகிறது. இதனை,*

***பெண்ணின் கண்களை***
***வண்டென்பார்! வண்ண***
***மலரென்பார்! பாயும்***
***அம்பென்பார்! துள்ளும்***
***கயலென்பார்! கவிஞர்கள்***
***கண்ணே.உன்***
***கண்களைக் கண்ட நானோ***
***குருடாகி மதி மயங்கி***
***உளருகிறேன்[3]***

*என்ற கவிதையில் காண்கிறோம். அருணா செல்வம் மற்றொரு இடத்தில் கண்ணைப் பற்றி மிக அழமாகச் சிந்தித்துப் பார்க்கிறார். உலகில் உள்ள அனைத்தையும் கண்கள் உற்றுநோக்குவதால் கண்ணைக் கலைக்கூடம் என்று புகழ்வதையும் காணமுடிகிறது. இத்தகைய உன்னத கருத்தினைத் தாங்கி நிற்கும் விதமாக,*

***உன் கண்கள்***
***வண்ணம் தீட்டாத வரைபடம்***
***உன் புருவம் வண்ணமில்லாத***
***வானவில்தான்***
***இமையென்ன மழைக்கால***
***மயில் தோகையோ!***
***அந்த கருவிழி பார்வையில்***
***காந்தம் தான் உள்ளதோ?***
***என் இரும்பு மனமும்***
***சட்டென்று அப்பார்வையில்***
***ஒட்டிக்கொண்டதே***
***அது கண்களா? கலைக்கூடமா?***
***கண்டதும் கவிப்பாட***
***தூண்டுகிறதே!***[4]

*எனும் கவிதை அமைந்துள்ளது. இவ்வாறாகப் புதுமையான மற்றும் புதுவிதமான கண்ணோட்டதில் சிந்திக்கக் கூடியவராகத் திகழ்கின்றார் கவிஞர் அருணா செல்வம். இப்புதுமையைக் குறித்து வெ.ராமதிலகம் அவர்கள், ஒவ்வொரு புது முயற்சியும் மரபின் விளக்கம் என்கிறார் டி.எஸ்.எலியட். புதுமை ஒவ்வொன்றும் புதுமையல்ல. அதனுள் ஏதோ ஒரு வகையில் பழமையும் அடித்தளமாக அமைந்திருக்கின்றது. உலகம் பழையதுதான். ஆனால், அதில்தான் எத்தனை புதிய பரிமாணங்கள், புதிய பார்வைகள்; அதே போலத்தான் புராணங்களும், புதுக்கவிதைகளும், காலங்களும் கோலங்களும் மாறினாலும் மனிதனின் மனதில் பகுத்தறிய முடியாத பழமைச் சின்னங்கள் படிந்துகிடக்கின்றன. சரியான சூழல் வாய்க்கும் போது மனிதன் அவற்றைக் குறியீடுகளாக வெளியிட முற்படுகிறான்5 என்ற கூற்றைக் காணும்போது கவிஞரின் ஆழ்மனதில் படிந்துள்ள சிந்தனைகளே படைப்பாகத் தோற்றம் பெற்று சமூகத்தில் மிளிர்கின்றன எனலாம். இத்தகைய விதத்திலும் கவிஞரின் கவிதைகள் அமைந்துள்ளன.*

**பல்வேறு பொருளில் கண்**

*அழகு, நாட்டம், நயனம், நேத்திரம், பார்வை, விழி போன்ற பல சொற்களைக் ‘‘கண்’’ என்ற சொல் பெற்றிருப்பினும் கவிதை என்றாகும்போது பல்வேறான கருத்துக்களில் புலப்பட்டுநிற்கிறது. அவ்வகையிலும் கவிஞரின் எழுத்துக்களில் காணலாம். உதாரணமாக,*

***என்னை இழந்த***
***பிறகும்***
***உன்னில் நான்***
***வாழ்கிறேன்***
***கண்தானம்***[6]

*எனும் கவிதையில் விழிப்புணர்வு சிந்தனை வெளிப்பட்டு நிற்பதைக் காண்கிறோம். இவ்வாறாக ‘‘கண்’’ என்ற சொல்லை பலவித பொருள்களில் கையாளுகின்ற திறமையுடைய கவிஞராக அருணா செல்வம் திகழ்கிறார். ‘‘கலைக்கூடம்’’ என்று ஒரு இடத்தில் கவிஞர் கண்ணைப் பற்றி பேசியிருந்தாலும் மற்றொரு இடத்தில் விஞ்ஞானத்தைக் கொண்டு பேசுவதையும் காணலாம். இதற்கு,*

***அறிவியலை விஞ்சும்***
***புகைப்படம் கருவி***
***உலக அழகிகளை சேமிக்கும்***
***கலைக்களஞ்சியம்***
***இருளிலும் வண்ணத்தை***
***நினைவு கூறும்***
***நினைவகம்***
***கண்கள்[7]***

*என்ற கவிதையை உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம். இக்கவிதையிலிருந்து கண் என்பதற்குப் புகைப்படக் கருவி, கலைக்களஞ்சியம், நினைவகம் என்ற கருவிகள் மற்றும் நூலையும் ஆசிரியர் சேர்த்துக் குறிப்பிடுகின்றார். இதன் மூலம் விஞ்ஞான உலகத்தையே விஞ்சிவிட்டதாக அருணா செல்வம் குறிப்பிட்டுச் செல்வதை கானலில் சிந்திய கண்ணீர் எனும் கவிதை நூலின் வாயிலாக தெளிவாக அறிந்துகொள்ள முடிகிறது. எனவே, கவிதைகள் என்பது சமுதாய சிந்தனைக்காகவும், மானுடத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி விடியலைத் தருவதற்காகவும் வழிகோல்பவையாகும். மரபுக்கவிதை, புதுக்கவிதை, திரைக்கவிதை, உரைநடை, பேச்சு எனப் பல கலைக்குள் அறிவியலையும் கவிதைக் கலைக்குள் அடக்கி ஆள முடிபவையான ஆக முடியும்.8 என்ற கருத்தினை பாஸ்கரன் வழியில் அறிகிறோம். இக்கருத்தானது கவிஞர் அருணா செல்வத்திற்குக் கச்சிதமாகப் பொருந்தியிருப்பதை மேற்கண்ட கவிதை நிரூபித்துக் காட்டுவதை அறிந்துகொள்ள முடிகிறது.மேலும், சமுதாயச் சிந்தனையை மிக தெளிவாகப் பின்வரும் கவிதையில் எடுத்தாள்கிறார் கவிஞர். இதனை,*

***ஆணுக்கும் பெண்ணுக்கும்***
***சம உரிமை***
***என்பார்கள்***
***கண் பார்வையைப் போல***
***கிட்டப்பார்வை***
***தூரப்பார்வை***
***அறியாதவர்கள்[9]***

*இதில், சமூகத்தில் இருபாலினத்திற்கும் சம உரிமை உண்டு என்றாலும், வார்த்தை அளவிலே இருப்பதை இக்கவிதை வெளிப்படுத்துவதைக் காணலாம். குறிப்பாக, கிட்டப்பார்வை மற்றும் தூரப்பார்வை எனும் இருவிதமான கண் குறைபாடுகளைக் குறிப்பிட்டுக் காட்டுவது கவிதை இயல்பிற்கு மிக ஏற்ற பொருத்தமுடையதாகத் திகழ்வதை அறியலாம். இவ்விரு வகை குறைபாடுகளை எளிதாக எவராலும் அறிந்துகொள்ள முடியாது. அதுபோலதான் சமுதாயத்தில் உள்ள சம உரிமை எனும் பேச்சினை எவராலும் நடைமுறைக்குக் கொண்டு வர முடியாதபடி இருப்பதை தன் எழுத்துக்களின் வாயிலாக நிரூபிக்கின்றார் கவிஞர்.*

*சமுதாய மதிப்பு என்பது தனிமனிதனுக்கு இல்லாத சமயத்தில் கவிஞர்களின் படைப்பு சமுதாய நோக்கத்தைப் பெறுவதாகச் செய்கிறது. அவ்வகையில் வறுமை மற்றும் பொருளாதாரத்தைக் குறித்தும் கவிஞர் அருணா செல்வம்எழுதுகிறார். இதனை,*

***வறுமையிலும்***
***நம்பிக்கை மிளிர்கிறது***

***கண்கள் இருக்கும்***
***தைரியம்***
***விற்றேனும் பெற்றுவிடலாம்***
***வளமையை.[10]***

*என்ற கவிதையை மேற்கோளாகக் கொண்டு அறியலாம். வறுமை என்பது பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு நோக்கலாம். அவ்வகையில் மனிதன் உயிர் வாழவும், உயர்ந்த பண்புடையவனாக வாழவும் சமுதாயம், பொருளாதாரம் ஆகிய இரண்டும் நல்ல விதத்தில் அமையவேண்டும். இல்லையென்றால் ஒழுக்கச் சீர்கேடுகள் உருவாகக் கூடும் என்பதை தன் கவிதையினுள்ளே அமைத்துக்காட்டுகிறார்.*

*கவிஞர் அருணா செல்வம் புதுக்கவிதைகளில் கண் எனும் உறுப்புக் குறித்து அதிகமாகப் பேசியிருக்கிறார். வெறும் உறுப்பாக மட்டும் பேசாமல் சமுதாயத்திற்குத் தேவையான உன்னத கருத்துகளாக பேசியிருப்பது சாலத்திறந்ததாகும். குறிப்பாக, கலைக் களஞ்சியமாகவும், புகைப்படக்கருவியாகவும், நினைவகமாகவும், கலைக்கூடமாகவும், சமூக மற்றும் பொருளாதாரத்திற்கான விழிப்புணர்வுக்குரிய ஊடகமாகவும் கண்ணைப் பயன்படுத்திக் கவிதை இயற்றியிருப்பது படைப்பாளரின் தனித்துவம் என்பதை இவ்வாய்வின் வழி அறிந்து கொள்ளலாம்.*

**சான்றெண் விளக்கம்**

1. *கு.மோகனராசு, காமத்துப்பாலில் ஆய்வுரைகள், மணிவாசகர்பதிப்பகம், சிதம்பரம், ப.237.*
2. *கவிஞர் அருணா செல்வம், கானலில் சிந்திய கண்ணீர், காடோடிப்பதிப்பகம், சென்னை, ப.9*
3. *மேலது, ப.21*
4. *மேலது, பக்.21-22*
5. *வெ.ராமதிலகம், புதுக்கவிதைகளில் தொன்மக் குறிப்பீடுகள், செல்லப்பாபதிப்பகம், மதுரை, ப.71.*
6. *கவிஞர் அருணா செல்வம், கானலில் சிந்திய கண்ணீர், காடோடிப்பதிப்பகம், சென்னை, ப.63*
7. *மேலது, ப.11*
8. *கா. பாஸ்கரன், யார் கவிஞன், அகரம்பதிப்பகம், தஞ்சாவூர், ப.12.*
9. *கவிஞர் அருணா செல்வம், கானலில் சிந்திய கண்ணீர், காடோடிப்பதிப்பகம், சென்னை, ப.17*
10. *மேலது, ப.17*

## Primary Research References

1. Poet. Aruna Selvam, Kaanalilsinthiyakanneer, Kaadodi Publication, Kamaraj Nagar, Chennai - 96, 2017

## References

1. *G. Mohanarasu, Kamathupaalil Aaivuraigal, Manivasagar Publication, Chidhambaram, 2002*

2. *V. Ramathilagam, Puthukavithaigalil Thonma Kuriyeedu, Chellappa Publication, Madurai - 16, 2009*
3. *G. Baskaran, Yaar Kavingyan, Agaram Publication, Thanjavur - 15, 2015*